செய்தி வெளியீடு நாள்:
**28.12.2024**

**வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகளை**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு**
**துணை முதலமைச்சர் அவர்களும் தினமும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் முடிவு பெறவுள்ள பணிகள்**
**வரும் பிப்ரவரி மாதம் *2025* முதல் படிப்படியாக மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்**

**சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.*104* கோடி மதிப்பீட்டில் தீவுத்திடலில் நகர்ப்புர வசதிகள் கொண்ட கட்டடம் கட்டும் இடத்தை ஆய்வு செய்தபின் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று *(28.12.2024)* சென்னை, காமராஜர் சாலை, தீவுத்திடலில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் *3.10* ஏக்கர் நிலப்பரப்பில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் **ரூ.*104* கோடி மதிப்பீட்டில்** தரை தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் இயற்கை வனப்புடன் கூடிய நவீன நகர்ப்புர பொது சதுக்கம், கண்காட்சி அரங்கங்கள், திறந்தவெளி திரையரங்கம், உணவகங்கள் போன்ற நவீன நகர்ப்புர வசதிகள் கொண்ட கட்டடம் கட்டும் இடத்தை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** சென்னை, காமராஜர் சாலை, தீவுத்திடலில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் *3.10* ஏக்கர் நிலப்பரப்பில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் **ரூ.*104* கோடி மதிப்பீட்டில்** தரை தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் இயற்கை வனப்புடன் கூடிய நவீன நகர்ப்புர பொது சதுக்கம், கண்காட்சி அரங்கங்கள், திறந்தவெளி திரையரங்கம், உணவகங்கள் போன்ற நவீன நகர்ப்புர வசதிகள் கொண்ட கட்டடம் அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இன்று *(28.12.2024)* இவ்விடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளை ஆய்வு மேற்கொண்டோம். சென்னை தீவுத்திடலில் *1.60* லட்ச சதுர அடி பரப்பளவில் *40* கடைகள், *200* இருசக்கர வாகனங்கள் மற்றும் *200* நான்கு சக்கர வாகனங்கள் என வாகனங்கள் நிறுத்துவதற்கான இட வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட உள்ளது. இதே போல் இந்த கட்டிடத்தில் *90* கழிவறைகள் கட்டப்பட உள்ளது. குறிப்பாக திருநங்கைகளுக்கென தனி கழிப்பறை வசதியும் இந்த கட்டிடத்தில் ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த கட்டுமான பணிகள் நிறைவுபெறும் பொழுது *40* அரங்குகள் சுமார் *1000* சதுர அடி நிலப்பரப்பில் அமைய உள்ளது.

அரங்க முதல் தளத்தில் *20* ஆயிரம் சதுர அடிக்கு கண்காட்சியகத்தின் அரங்கமும், *20* ஆயிரம் சதுர அடியில் உணவகமும் அமைய உள்ளது. மேலும் இங்கு வருகை புரியக்கூடிய பார்வையாளர்களுக்கு ஏற்ப கழிப்பிட வசதியும், குடிநீர் வசதியும் செய்து தருவதற்கான நடவடிக்கைகள் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் *400* இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடங்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளது. அதேபோல் கட்டிடத்தின் முகப்பு *450* அடி உயரத்தில் மிகவும் தொன்மையான கலை நுட்பங்கள் கொண்டு அமைக்கப்பட உள்ளது.

வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகளை தினமும் களஆய்வு மேற்கொண்டு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும்** மற்றும் **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும்** தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். இந்த பணிகள் முழு உச்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக *2025* பிப்ரவரி மாதம் முடிவு பெற உள்ள பணிகள் படிப்படியாக மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. *6,000* கோடி மதிப்பிலான தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த பணிகள் ஆனது வடசென்னை வளர்ச்சி திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர் திரு.ஸ்ரீராமுலு, தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் திரு.நா.பாலமுருகன், மண்டல அலுவலர்கள் திருமதி.பரிதா பானு, திரு.ஏ.எஸ்.முருகன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.